## 12th Geography Lesson 7 Questions in Tamil

## 7] பேணத்தகுந்த மேம்பாடு

1) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i ) ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியை மட்டும் சார்ந்ததல்ல மாறாக இயற்கை வளங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் சார்ந்தது.

ii ) ஐக்கியநாடுகள் சபையானது சர்வதேச சமூகத்திற்கான நீண்டகால சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் உத்திகளைக் கண்டறிய வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் இருந்து 22 நபர்கள் கொண்ட குழுவை பணித்தது.

iii ) இந்த சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக்கான உலக ஆணையம் (WCED) அமெரிக்க நாட்டின் அப்போதைய பிரதமரான க்ரோ ஹார்லம் ப்ரண்ட்லண்ட் (Gro Harlem Brundland) தலைமையின் கீழ் செயல்பட்டது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

2) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) ப்ரண்ட்லண்ட் அறிக்கையானது மனிதர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்குமுக்கியத்துவம் கொடுக்கவில்லை.

ii ) இந்த ஆணையம் பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான மூன்று முக்கிய கூறுகளை அடிக்கோடிட்டுக் காட்டியது.

iii ) சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூகம் மூன்றடிக் கோவைகள் என அழைக்கப்பட்டன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

3) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) புவி உச்சி மாநாட்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த கருத்தரங்கு இந்த உலக சுற்றுச்சூழல் ஆணையத்தின் விளைவாக நடத்தப்பட்டதாகும்.

(ii) ரியோ உச்சி மாநாட்டின்முக்கிய சாதனையானது காலநிலை மாற்றம் பற்றிய மாநாடு க்யோட்டோ நெறிமுறை (Kyoto Protocol) ஒப்பந்தத்திற்கு வழிவகுத்தது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

4) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) ஐக்கிய நாடுகள் சபை நடத்திய பேணத்தகுந்த மேம்பாடு கருத்தரங்கு , ரியோ 2012 , ரியோ +20 அல்லது புவி உச்சி மாநாடு என்றும் அறியப்பட்டது.

ii ) இது பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான மூன்றாவது மட்டும் சமீபத்திய கருத்தரங்கு ஆகும்.

iii ) இது ரியோடிஜெனிரோவில் 2012 ஜூன் 13 முதல் 22 வரை நார்வே அரசால் நடத்தப்பட்டது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

5) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச அமைப்பு 1990 இல் பேணத்தகுந்த மேம்பாடு என்ற சொல்லை அறிமுகப்படுத்தியது.

ii ) பேணத்தகுந்த மேம்பாடு என்பது எதிர்கால தலைமுறைகளின் தேவைகளுக்காக இருக்கும் வளங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாமல் இப்போதைய தலைமுறையின் தேவையை பூர்த்திசெய்யும் வளர்ச்சியாகும்.

iii ) பேணத்தகுந்த மேம்பாட்டின் முக்கிய நோக்கமானது நியாயமான மற்றும் சமமான முறையில் பொ ருளாதார நன்மையை பகிர்ந்தளிப்பதும் அதை எதிர்கால தலைமுறைக்கு தொடர்ந்து வளங்குவதும் ஆகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

6) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) ஐக்கியநாடுகள் சபையானது 1992ல் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக் கருத்தரங்கில் ஒரு உலக உறுதிமொழியை வெளியிட்டது.

ii ) இதில் நியாயமான, நிலையான மற்றும் அமைதியான சமுதாயத்தை உலக அளவில் உருவாக்கவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டது.

iii ) இந்த செயல் திட்டமானது பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான "கோரிக்கை 17" என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

7) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) செப்டம்பர் 2018–ல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுசபையானது "உலகளாவிய ஒருங்கிணைந்த மற்றும்

மாற்றமுடைய பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான "நிகழ்வு 2050" என்ற கருத்தை முறையாக ஏற்றது.

ii ) பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான 17 இலக்குகள் இதில் உள்ளன.

iii ) இந்த இலக்குகளானது ஒவ்வொரு நாட்டிலும் 2016 முதல் 2030 க்குள் செயல்படுத்தப்படவேண்டும் எனக் அறிவுறுத்தப்பட்டது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

8) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) ஏழ்மையை ஒழிக்கவும் , புவியைக் காக்கவும், எல்லோரும் வளம்பெறவும் பேணத்தகுந்த மேம்பாட்டின் ஒரு பகுதியாக உலக நாடுகள் இலக்குகளை ஏற்றுகொண்டன.

ii ) ஒவ்வொரு இலக்கும் 30 வருடங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

iii ) இந்த இலக்குக்ளை அடைய அரசாங்கங்கள், தனியார் துறைகள், சமூகம் மற்றும் மக்கள் என ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய பங்கை பொறுப்பாக செய்யவேண்டும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

9) பேணத்தகுந்த மேம்பாட்டின் இலக்கு ஒன்றோடு தொடர்புடைய கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) எல்லா இடங்களிலும் எல்லா வகையான வறுமையையும் ஒழித்தல்.

ii ) உலகில் ஐந்தில் ஒருவர் இன்றும் ஒரு நாளைக்கு 1.9 டாலருக்கும் குறைவான வருமானத்தில் வாழ்கிறார்

iii ) பொருளாதார வளர்ச்சி என்பது நிலையான பணியைக் கொடுப்பதும் சமத்துவத்தை முன்னேற்றுவதும் ஆகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

10) பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான இலக்கு இரண்டில் கூறப்பட்டுள்ளவற்றை தேர்ந்தெடு.

i ) நிலையான விவசாயத்தை மேம்படுத்துவது

ii ) உணவு பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்தை பெறுவது

iii ) பசியை ஒழிப்பது

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

11) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) பொதுவான நோய்கள் மற்றும் இறப்பு விகிதத்தைக் குறைத்தலில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ii) சுத்த நீர் மற்றும் சுகாதாரம் கிடைப்பதிலும் மலேரியா, காசநோய், இளம்பிள்ளைவாதம் மற்றும் எச்.ஐ.வி / எயிட்ஸ் பரவுதல் போன்றவற்றை குறைப்பதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

12) பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான இலக்கு நான்கு தொடர்பானவற்றை தேர்ந்தெடு.

i ) முழுவதும் கல்வியை ஊக்குவித்தல் எல்லா நிலைகளிலும் கல்வி எல்லோருக்கும் அளித்தல் என்பதில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது.

ii ) பள்ளிகளில் சேர்க்கை குறிப்பாக பெண் குழந்தைகளின் சேர்க்கை எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

iii ) சில நாடுகள் எல்லா நிலைகளிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம கல்வி வழங்குகின்றன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

13) கீழ்க்கண்டவற்றுள் பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான இலக்குகளைத் தேர்ந்தெடு.

a) பொருளாதாரம்

b) சமுதாயம்

c) உயிர்க்கோளம்

d) இவை அனைத்தும்

14) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) பாலின சமத்துவம் அடைதல் என்பது முக்கியமாக பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் அதிகாரத்தை அதிகப்படுத்துதல்

(ii) பாலின சமத்துவம் என்பது மனிதனின் அடிப்படை உரிமை அல்ல, சமாதானமான வளமான மற்றும் நிலையான ஒரு உலகிற்கு ஒரு அடிப்படை ஆகும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

15) கூற்று (A): ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கானோர் அதிலும் அதிக எண்ணிக்கையில் குழந்தைகள் நீர்,

சுகாதாரம் மற்றும் சுத்தம் தொடர்பான நோய்களால் இருக்கின்றனர்.

காரணம் (R): மோசமான பொருளாதாரம் சரியில்லாத உள்கட்டமைப்பு

a) கூ ற்று (கூ) காரணம் (கா) இரண்டுமே சரி, கூற்றுக்கான சரியான விளக்கமாக காரணம் உள்ளது.

b) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் கூற்றுக்கான சரியான விளக்கமாக காரணம் இல்லை.

c) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

d) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

16) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) பணம் தான் இன்றைய உலகில் நாம் எதிர்நோக்கும் பெரிய சவால்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு முக்கிய மையமாக உள்ளது.

(ii) பேணத்தகுந்த ஆற்றல் மக்களின் வாழ்வு, பொருளாதாரம் மற்றும் புவியை மாற்றியமைப்பதற்கு கிடைத்த ஒரு மிகப்பெரிய வாய்ப்பாகும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

17) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு நல்ல தரமான வேலைவாய்ப்புகளைத் தந்து அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி அதேவேளையில் நாட்டின் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாத ஒரு சமுதாயம் தேவை

(ii) வேலை செய்யும் வயதில் இருக்கும் அனைவருக்கும் வேலைவாய்ப்புகளும் கண்ணியமான பணிச்சூழல்களும் தேவை.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

18) ஒரு நாட்டின் வருமானத்திற்கு முக்கிய உற்பத்திக் காரணியாக விளங்குவது எது?

a) விவசாயம்

b) கல்வி

c) வேலைவாய்ப்பு

d) நிலையான தொழில் வளர்ச்சி

19) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சமநிலை அற்ற தன்மையை குறைக்க வேண்டுமானால் ஒதுக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள்மீது கவனம் செலுத்தும் வகையில் கொள்கைகள் இயற்றப்பட வேண்டும்.

(ii) அவை உலக அளவில் பொது நெறிமுறைகளாக ஏற்கப்படவேண் டியதில்லை.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

20) இலக்கு 11 தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) நகரங்களானது கருத்துக்கள், வணிகம், கலாச்சாரம், அறிவியல், உற்பத்தி, சமூகவளர்ச்சி மேலும் பல செயல்களின் மையமாக திகழ்கிறது.

ii ) நகரங்களானது மக்கள் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் காண வழி வகுக்கின்றன.

iii ) கூட்ட நெரிசல், அடிப்படை சேவைகளுக்கு போதாத நிதி, போ துமான அளவு வீடுகள் இல்லா நிலைமை மற்றும் அழியும் நிலையில் உள்ள கட்டமைப்பு போன்றவை நகரங்களுக்கே உரிய சவால்களாகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

21) பின்வருவனவற்றுள் பேணத்தகுந்த மேம்பாட்டின் எந்த இலக்கினை நிறைவேற்றும்போது ஒட்டுமொத்த வளர்ச்சித்திட்டங்களையும் நிறைவேற்ற முடியும்?

a) காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளை எதிர்கொள்ள அவசரகால நடவடிக்கை எடுத்தல்.

b) எளிதில் கிடைக்கக்கூடிய, நம்பத் தகுந்த, நிலையான மற்றும் நவீன ஆற்றல் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிசெய்தல்

c) நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தியை உறுதிசெய்தல்

d) பெருங்கடல், கடல் மற்றும் கடற்சார் வளங்களைப் பாதுகாத்து நிலையாக உபயோகித்தல்

22) காலநிலை மாற்றம் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) காலநிலை மாற்றம் எல்லா நாடுகளையும் பாதித்துள்ளது.

ii ) இது உலக பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கிறது.

iii ) மக்கள்வாழ்கையைப் பாதிக்க வில்லை.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

23) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) உலகின் பெருங்கடல்கள் – அவற்றின் வெப்பநிலை, நீரோட்டங்கள் மற்றும் அதில் வாழும் உயிர்கள் ஆகியவை

புவியை மனிதனின் வாழிடமாக உருவாக்கும் ஒரு உலகளாவிய அமைப்பாக இயங்குகின்றன.

(ii) இந்த உலகளாவிய வளங்களை மிகவும் கவனமாக கையாளுதல் என்பது பேணத்தகுந்த எதிர்காலத்திற்கு ஒரு சிறந்த வழியாகும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

24) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) புவியின் நிலப்பரப்பில் காடுகள் 40% காணப்படுகின்றன.

ii ) காடுகள் உணவு மற்றும் உறைவிடம் தருவது மட்டுமல்லாமல் காலநிலை மாற்றத்தைத் தடுப்பதிலும், உயிரினப்பன்மையை பேணுவதிலும் உள்நாட்டு உயிரினங்களுக்கு ஒரு வாழிடமாகவும் விளங்குகிறது.

iii ) பதிமூன்று மில்லியன் ஹெக்டேர் காடுகள் ஒவ்வொரு வருடமும் அழிக்கப்படுகின்றன.

iv ) 3.6 பில்லியன் ஹெக்டேர் வறண்ட நிலங்கள் பாலைவனமாகிறது.

a) i ), ii ), iii ), iv )

b) i ), ii ), iii )

c) ii ), iii ), iv )

d) iii ), iv )

25) நியாயமான மற்றும் சமாதானமான உள்ளடங்கிய சமுதாயத்தை உருவாக்குவதற்கான பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான இலக்கு எது?

a) இலக்கு 16

b) இலக்கு 12

c) இலக்கு 11

d) இலக்கு 13

26) கீழ்க்கண்டவற்றுள் பேணத்தகுந்த மேம்பாட்டின் வெற்றியாக கருதப்படுவது எது?

a) நிலையாக காடுகளை மேலாண்மை செய்தல் உயிரினப்பன்மை அழிவதைத் தடுத்தல்.

b) பாலைவனமாகாமல் தடுத்தல்

c) உலகளாவிய நட்புணர்வை நிலையான வளர்ச்சிக்காக மறுபடியும் உயிர்ப்பித்தல்

d) நில அழிவை தடுத்து மறுபடியும் செழிப்புற செய்தல்

27) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) வரலாற்றின் தொடக்கத்திலிருந்து புவியின் காலநிலை மாற வில்லை.

ii ) கடந்த 650,000 வருடங்களில் பனியுகமும் வெப்பயுகமும் லட்சக்கணக்கான ஆண்டுகளாக மாறிமாறி இருந்துள்ளது.

iii ) இந்த காலநிலை மாறுபாட்டிற்கு முக்கியக் காரணம் புவியின் சுழற்சியில் ஏற்படும் சிறு மாற்றமும் அதனால் நமது புவிக்கோளத்திற்கு கிடைக்கும் சூரிய வெப்பம் மற்றும் ஒளியில் ஏற்படும் மாற்றமுமே ஆகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

28) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) கடந்த 200 வருடங்களில் புவியின் வெப்பநிலையானது 100 °பாரன்ஹீட் அதிகரித்துள்ளது.

ii ) புவியில் ஏற்படக்கூடிய மிகச்சிறிய மாற்றமும் மிகப்பெரிய காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

iii ) உருகும் பனியாறு, கடல்நீர்மட்ட உயர்வு , நீண்டகால பஞ்சம் , அதிக மழை மற்றும் வெள்ளம் போன்ற மாற்றங்கள் ஏற்கனவே நடைபெற ஆரம்பித்துவிட்டது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

29) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) காலநிலை மாற்றத்திற்கான காரணங்கள் புதைபடிவ எரி பொருள்களை எரிக்கும்போது வாயுக்கள் வளிமண்டலத்திற்கு செல்கின்றன.

(ii) ஆற்றலுக்காக எரிக்கப்படும் புதைபடிவ எரிபொருள்கள் போக்குவரத்து வாகனங்களால் ஏற்படும் பாதிப்பு மற்றும் காடுகளை அழித்தலோடு இணைந்து புவி வெப்பமயமாதலுக்கு காரணமாகிறது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

30) காலநிலை மாற்றத்தின் விளைவுகளாக விஞ்ஞானிகளால் கடந்த காலத்தில் முன்னறிவிப்பு செய்யப்பட்டவை எவை?

i ) கடலில் மிதக்கும் பனிக்கட்டிகள் உருகுதல்

ii ) கடல் நீர்மட்ட உயர்வு

iii ) கடுமையான வெப்ப அலைகள்

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

31) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்கான வரையறை மாநாடு (UNFCCC) 2019ஆம் ஆண்டு, மே 17 ந்தேதி நடைபெற்றது.

(ii) பேணத்தகுந்த மேம்பாட்டோடு காலநிலை மாற்றம் மற்றும் பேரழிவு அபாய குறைப்பிற்கான செண்டாய் வரையறை ஆகியவற்றை ஒருங்கிணைப்பதைக் குறித்து விவாதிக்கப்பட்டது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

32) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) பசுமை இல்ல வாயுக்கள் வெப்பத்தை உள்ளிழுத்து அது வளிமண்டலத்திற்கு செல்லவிடாமல் தக்கவைத்து புவியின் வெப்பநிலை உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது.

ii ) வெப்பமான சூழல் பூச்சிகள் குறைவான நாட்கள் உயிரோடு இருக்க உதவும்.

iii ) அதிகரிக்கும் வெப்பநிலை வேளாண்மையில் அதிக உற்பத்தி செய்கின்ற மற்றும் நன்கு பயிர் விளைகின்ற நிலங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

33) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) உயரும் வெப்பநிலை மற்றும் மாறும் மழை அளவால் வறட்சி மற்றும் வெப்ப அலைகள் அதிகரிக்கின்றன.

(ii) உலக அளவில் கடல் நீர் மட்டமானது 1700 களிலிருந்து குறைந்தது ஆண்டுக்கு 1.1 லிருந்து 1.25 செ.மீ உயரம் வரை உயருகிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

34) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) இன்னும் அரை நூற்றாண்டின் இடையில் ஆர்டிக் துருவமானது கோடைகாலத்தில் முழுவதுமாக உருகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) காலநிலை மாற்றத்தை 7 வகைகளில் எதிர்கொள்ளலாம்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

35) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) மீட்சித்திறன் காலநிலை மாற்றத்திற்குக் காரணமான பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

(ii) தழுவல் காலநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படும் பாதிப்புகளை எவ்வாறு குறைப்பது என்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

36) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) தழுவல் செயல்பாடுகள் காலம் கடந்து போவதற்கு முன் காலநிலை மாற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை தொடங்க வேண்டும்.

(ii) புதுப்பிக்கத்தக்க மற்றும் பசுமை ஆற்றல் மூலங்களைச் சார்ந்து இருப்பதே காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள ஒரு முக்கிய வழி முறையாகும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

37) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) விலை கூடிய ஆற்றல் சேமிக்கும் மின்கருவிகளாகிய CFL பல்புகள், குளிர்சாதனப்பெட்டி, காற்றுபதனி (Air Condition) முதலியவற்றை உபயோகிப்பதைக் குறைக்கவேண்டும்.

(ii) பயன்பாட்டில் இல்லாதபோது மின்சாதனங்களை நிறுத்தி வைப்பது அவசியமாகும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

38) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) குறைத்தல் – மீண்டும் பயன்படுத்துதல் – மறு சுழற்சி முறைகள் நமது வளங்களையும் ஆற்றலையும் பேணிப்பாதுகாக்க உதவுகிறது.

(ii) இது மாசுபாட்டைக் குறைத்து அதன் மூலம் பசுமை இல்ல வாயுக்களைக் குறைக்கிறது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

winmeen.com

39) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கார்பன் –டை– ஆக்ஸைடை வளிமண்டலத்திலிருந்து நீக்கும் மிகவும் சுத்தமான மற்றும் வலிமையான ஒரு காரணி பசுமையான மரங்களாகும்.

(ii) மரங்களையும் காடுகளையும் மனிதனின் நவீன வளர்ச்சிக்காக அழித்ததன் விளைவாக கார்பன் – டை – ஆக்ஸைடை வளிமண்டலத்தில் இருந்து நீக்கும் புவியின் திறன் அதிக அளவு அதிகரித்து விட்டது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

40) இயற்கை வேளாண்மை தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) வளிமண்டல கார்பன்டைஆக்ஸைடின் ஒரு முக்கிய தேக்கமாக நீர் காணப்படுகிறது.

ii ) பாரம்பரிய விவசாயத்திற்காக காடுகள் அழிக்கப்பட்டதால் இந்த தேக்கத்தை அதிக அளவில் அழித்துகொண்டிருக்கிறது.

iii ) இயற்கை வேளாண்மை இயற்கை உரங்களை பயன்படுத்தி சரியான மகசூல் பெற உதவுகிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

41) வடிகால் நீர் மேலாண்மை தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) வடிகால் நீர் அல்லது வடி நிலம் என்பது ஒரு நதி வழிந்தோடும் புவிப்பகுதியாகும்.

ii ) நதி நீர் ஒரு இடத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஒரு பொதுவான வடிகாலை நோக்கி வழிந்து ஓடுகிறது.

iii ) நீர் மேலாண்மை என்பது தகுந்த உற்பத்தியைப் பெற நிலம் மற்றும் நீர் வளங்களை சரியாக மேலாண்மை செய்வதாகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

42) பின்வருவனவற்றுள் வடிகால் நீர் மேலாண்மை எதனோடு தொடர்புடையது?

i ) மண் மற்றும் நீரைப் பேணிப் பாதுகாத்தல்

ii ) தகுந்த முறையில் நிலத்தைப் பேணுதல்

iii ) கடற்கரைகளை பராமரித்தலை ஊக்குவித்தல்

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

43) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) வடிநிலதிட்டமானது வடிநிலத்தின் தன்மையை கண்டறிவதும் அந்த நிலத்திற்கான நீர் மூலங்களின் இருப்பை குறிப்பு எடுப்பதும் ஆகும்.

(ii) வடிநில மேலாண்மைத்திட்டம் 10 படிகளை கொண்டுள்ளது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

44) இந்தியாவில் வடிநில மேலாண்மை தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) நமது நாட்டில் வடிநில மேலாண்மைத் திட்டமானது இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டு 1990களின் தொடக்கத்திலிருந்து செயல்படுத்தப்படுகிறது.

ii ) பலவகை மேம்பாட்டுத் திட்டங்கள் பல்வேறுபட்ட நீர்பிடிப்பு சூழலில் ஆரம்பிக்கப்பட்டது.

iii ) 1980 மற்றும் அதற்கு முன்பான வடிநில மேம்பாட்டு திட்டங்கள் அனைத்தும் மண்வளம் பேணிபாதுகாத்தல் மற்றும் மழைநீர் சேமிப்புத்திட்டங்களையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

45) மழைநீர்சேமிப்பு தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் தங்களது அன்றாட வீட்டுத்தேவைகளுக்கு சுத்தமான நீரின்றி இருக்கின்றனர்.

ii ) அதிகரிக்கும் நீர்பற்றாக்குறையே 21 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய சவாலாகும்.

iii ) மழை நீர் சேகரிப்பு ஒரு மதிப்புமிக்க வளமாக முக்கியத்துவம் பெறுகிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

46) மழைநீர் சேமிப்பின் அவசியங்களை தேர்ந்தெடு.

i ) நீர் அளிப்புப் பற்றாக்குறையை வெல்வது

ii ) நீர் பற்றாக்குறையை சமாளிக்க நிலத்தடி நீரை அதிகரிக்க மிகச்சிறந்த மற்றும் மிகச் சிக்கனமான வழி

iii ) நகரப்பகுதியில் காணப்படும் நடைபாதை பகுதியை மண்ணால் நிரப்புவது

iv ) அதிக மழை பெறும் பகுதிகள் அல்லது அதிகமாக நீர் தேங்கும் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர அதை நீரால் நிரப்புதல்

a) i ), ii ), iii ), iv )
b) i ), ii ), iii )
c) ii ), iii ), iv )
d) iii ), iv )

47) மழைநீர் சேமிப்பு நுட்பங்கள் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) நில மேற்பரப்பில் நீரை எதிர்காலத்திற்காக சேமித்தல் மற்றும் நிலத்தடி நீர் வளம் புதுப்பித்தல் மழைநீர் சேமிப்பில் இரு முக்கிய நுட்பங்கள் ஆகும்.
ii ) நிலத்தடி நீரை நிரப்புதல் தற்போதைய மழைநீர் சேமிப்பின் புதிய திட்டமாகும்.
iii ) இது பொதுவாக கூழாங்கல், பாறாங்கல் மற்றும் மணலால் நிரப்பப்பட்ட குழிகள், கிணறுகள் , அகழி முதலிய அமைப்பைக் கொண்டதாகும்.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

48) சுற்றுச்சூழல் தாக்கத்தை மதிப்பிடல் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) முன்னேற்றத்தின் ஒரு முக்கிய அம்சம் விவசாயத்தின் மூலம் பொருளாதாரத்தை முன்னேற்றுதல் ஆகும்.
ii ) மனிதர்களின் முன்னேற்ற வழிகளின் மேலாதிக்கம் உலகின் அமைப்பில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது.
iii ) பல நாடுகள் தங்களுடைய அடிப்படை தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கும் வேளையில் சிலநாடுகள் உயர்ந்த வாழ்கைத் தரத்தைக் கொண்டுள்ளன.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

49) கூற்று(A): ஆறுகளும் ஏரிகளும் மாசடைந்தன, வாயுமண்டலம் அச்சுறுத்தும் நிலையை அடைந்துள்ளது, குவியும் வீட்டு மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் நிலத்தை அதிகமாக சீரழித்து விட்டது.
காரணம் (R): கடந்த கால முன்னேற்ற திட்டங்கள் எல்லாம் அவற்றால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பின்விளைவுகளை பற்றி கருத்தில் கொள்ளாமல் நடைமுறை படுத்தப்பட்டவைகளாகும்.
a) கூ ற்று (கூ) காரணம் (கா) இரண்டுமே சரி, கூற்றுக்கான சரியான விளக்கமாக காரணம் உள்ளது.
b) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் கூற்றுக்கான சரியான விளக்கமாக காரணம் இல்லை.
c) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
d) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

50) சுற்றுச்சூழல் தாக்கத்தை மதிப்பிடலின் நோக்கங்களைத் தேர்ந்தெடு.
i ) பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயத்தின் மீது தாக்கம் ஏற்படுத்தக்கூடிய முன்னேற்ற செயல்பாடுகளை அடையாளம் கண்டு, முன்னறிவித்து மற்றும் அதை மதிப்பிடல்.
ii ) சுற்றுச்சூழலின் பின்விளைவுகள் குறித்த முடிவுகளை எடுக்கத்தேவையில்லை.
iii ) சரியான மாற்று நடவடிக்கைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை அடையாளம் காணுதல் மூலம் பேணத்தகுந்த மேம்பாட்டை ஊக்கப்படுத்துதல்
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

51) சுற்றுச்சூழல் தாக்கத்தினை மதிப்பிடும் செயல்முறைகளின் படிநிலைகளைத் தேர்ந்தெடு.
i ) பாதிப்பு குறித்து ஆய்வு
ii ) முக்கிய தாக்கங்களை விளைவிக்கும் காரணிகளைக் கண்டறிதல்.
iii ) தாக்கத்தை ஆராய்தல்
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

52) சுற்றுச்சூழல் தாக்கத்தினை மதிப்பிடும் செயல்முறைகளின் படிநிலை தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) மட்டுப்படுத்துதல் படிநிலையில் நிர்ணயிக்கப்பட்ட திட்டப் பணிகளின் சாத்தியமான பாதகமான சுற்றுபுறசூழல் விளைவுகளை குறைக்கவும் தவிர்க்கவும் பரிந்துரை செய்கிறது.
ii ) அறிக்கை நிலையில் ஆய்வுகளின் முடிவுகளை ஒரு அறிக்கையாக தயார் செய்து முடிவு எடுக்கும் அதிகாரிகள் அல்லது சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு வழங்குதல்.
iii ) சமர்ப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் அறிக்கையின் தரம் மற்றும் அதன் வினைவுறுதிறனை சோதித்து முடிவு எடுப்பதற்கு தேவையான தகவல்களை அறிக்கையை மறு ஆய்வு செய்தல் தருகிறது.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

53) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு
(i) முடிவு எடுத்தல் நிலையில் செயல்திட்டம் ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்ட பின் அதன் பணி தொடங்குகிறது.

(ii) பிந்தைய கண்காணிப்பு நிலையில் அந்த திட்டம் நிராகரிக்கப்பட்டதா அங்கீகரிக்கப்பட்டதா அல்லது இன்னும் மாற்றம் தேவையா என்பது குறித்து முடிவு செய்யப்படுகிறது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

54) இந்தியாவில் சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பிடுதல் முறை தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இந்தியாவில் சுற்றுச்சூழல் தாக்கத்தை அளவிடும் முறை ஆற்றுப்பள்ளதாக்கு செயல்திட்டங்களை அளவிடும் நோக்கத்தோடு 1978ல் தொடங்கப்பட்டது.

ii ) இந்திய அரசு சுற்றுச்சூழல் பாதுகாப்புசட்டம் 1986 இன் கீழ் எந்த ஒரு விரிவாக்கத்திட்டம் அல்லது புதுப்பித்தல் திட்டத்திற்கும் சுற்றுச்சூழல் அனுமதி கட்டாயமாக்கப்பட்டது.

iii ) அட்டவணை 10 இல் பட்டியலிடப்பட்டுள்ளபடி எந்த ஒரு புதிய செயல்திட்டத்திற்கும் சுற்றுச்சூழல் அனுமதி கட்டாயமாக்கப்பட்டது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

55) EIA தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) 1994ல் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கு பிறகு சுற்றுச்சூழல் தாக்கத்தை அளவிடும் முறையில் 12 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

ii ) மத்திய மற்றும் மாநில ஆணையங்கள் இதை (EIA – Environmental Impact Assesment) மேம்படுத்தி மேலாண்மை செய்யும் பொறுப்பை பங்கிட்டுக்கொள்கிறது.

iii ) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடானது தற்போது 50 வகையான செயல்திட்டங்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

56) EIA சட்டம் 2006 படி எந்த செயல்திட்டங்கள் சுற்றுச்சூழல் அனுமதியை மத்திய அமைச்சகத்திலிருந்து பெற்ற பிறகே செயல்படுத்த முடியும்?

i ) தொழிற்சாலைகள்

ii ) சுரங்கங்கள்

iii ) அனல் மின்நிலையங்கள்

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

57) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) புதிய சட்டம் புதிய திட்டங்களுக்கு அனுமதி கொடுப்பதை திட்டங்களின் அளவு மற்றும் திறனை பொறுத்து மாநில அரசு அனுமதி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. ii ) EIA ஆனது புதிய திட்டங்களின் சுற்றுப்புற ஆரோக்கிய மற்றும் சமூகத் தாக்கத்தை மதிப்பி டாது.

iii ) பாதுகாப்பான மற்றும் பேணத்தகுந்த வளர்ச்சியே சுற்றுச்சூழல் தாக்கத்தின் மதிப்பீட்டின் நோக்கமாகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

58) பேணத்தகுந்த மேம்பாட்டை ஊக்கப்படுத்தும் முறைகளைத் தேர்ந்தெடு.

i ) ஐக்கியநாடுகள் சபையின் 193 உறுப்பு நாடுகளும் 2030 பேணத்தகுந்த மேம்பாட்டு கோரிக்கைகளின் ஒரு பகுதியாக 17 பேணத்தகுந்த மேம்பாட்டு இலக்குகள் மற்றும் 369 இலக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ii ) இது ஜனவரி 1, 2016லிருந்து நடைமுறைக்கு வந்தது.

iii ) இந்த இலக்குகளானது சர்வதேச நாடுகளின் ஆலோசனைகளின் முடிவாகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

59) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) பேணத்தகுந்த மேம்பாடு இலக்குகளின் இறுதியான குறிக்கோளானது ஏழ்மையைக் குறைப்பது, புவியைப் பாதுகாப்பது மற்றும் ஒவ்வொருவரின் மேம்பாட்டை உறுதிசெய்வது போன்றதாகும்.

ii ) ஒவ்வொரு குறிக்கோளும் ஒரு தனிப்பட்ட இலக்குகளைக் கொண்டுள்ளது.

iii ) இலக்குகள் 2040க்குள் நிறைவேற்றப்படவேண்டும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

60) நாடுகள் பேணத்தகுந்த மேம்பாட்டு இலக்கை நிறைவேற்றுவதில் எவ்வளவு அருகாமையில் உள்ளன என்பதைத் தெரிந்து கொள்ள இயங்கும் தன்னார்வ நிறுவனங்களை தேர்ந்தெடு.

i ) பெர்ட்டல்ஸ்மன் ஸ்டிஃப்டங்

ii ) ஐக்கியநாடுகளின் பேணத்தகுந்த மேம்பாட்டு தீர்வுகள் கணிணி கட்டமைப்பு மையம்

iii ) பெஸ்ட் பேர்சொன் நிறுவனம்

a) i ), ii ), iii )

b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

61) நாடுகள் பேணத்தகுந்த மேம்பாட்டு இலக்கை நிறைவேற்றும் செயல்திறன் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) நாடுகள் பேணத்தகுந்த மேம்பாட்டு இலக்கை நிறைவேற்றும் செயல்திறன் அடிப்படையிலான தரநிலை பட்டியலில் ஸ்வீடன் முதலிடம் பெற்றுள்ளது.

ii ) குழு 20 (G 20) நாடுகளில் ஜெர்மனி மற்றும் பிரான்சு மட்டுமே முதல் 10 இடங்களில் உள்ளன.

iii ) ஆசியா–பசிபிக் நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் முறையே 18, 19 மற்றும் 20ஆம் இடத்தில் உள்ளன.

a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

62) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) இந்தபேணத்தகுந்த மேம்பாட்டு இலக்குகள் குறியீடு அடிக்கோடிட்டு காட்டுவது என்னவென்றால் "உச்சநிலை செயலாக்கத்தை அடைந்து விட்டாலும் எல்லா நாடுகளும் இலக்குக்கும் செயலாக்கமைடைந்த வீதத்துக்கும் உள்ள இடைவெளியை நிரப்புவதை தங்கள் முக்கிய பணியாகக் கொள்ளவேண்டும்."

(ii) பேணத்தகுந்த மேம்பாட்டு திட்டத்தில் செயல்படுத்தும் 157 நாடுகளில் இந்தியா 130 ஆவது உலகளாவியக் குறியீட்டைக் கொண்டுள்ளது.

a) (i) மற்றும் (ii) சரி
b) (i) மற்றும் (ii) தவறு
c) (i) சரி (ii) தவறு
d) (i) தவறு (ii) சரி

63) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நிலத்தில் உள்ள உயர் ஓத குறியிலிருந்து கண்டத்திட்டு வரை உள்ள பகுதி கடற்கரையோர மண்டலங்கள்

(ii) 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ரியோ டி ஜெனிரோ யோ, பிரேசிலில் புவியின் சுற்றுச்சூழல் மீதான அனைத்து நாடுகளின் அரசாங்களுக்கு இடையே நடைபெற்ற உயர்நிலை கூட்டங்கள்.

a) (i) மற்றும் (ii) சரி
b) (i) மற்றும் (ii) தவறு
c) (i) சரி (ii) தவறு
d) (i) தவறு (ii) சரி

64) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கதிர்வீச்சை உறிஞ்சும் வாயுக்களை அளவுக்கு அதிகமாக வெளியிடுவதால் மெதுவாக உயரும் புவி வெப்பநிலையைக் குறிப்பது புவிவெப்பமயமாதல்.

(ii) அதிகாரபூர்வமான ஒரு நிர்வாகம் அதிக அதிகாரமுடைய நிர்வாகத்தின் வழிகாட்டல்படி பொறுப்பேற்று உள்மட்டத்தில் நிர்வாக மற்றும் நலத்திட்ட பணிகள் செய்யும் ஒரு அமைப்பு உள்நாட்டு அதிகாரம்.

a) (i) மற்றும் (ii) சரி
b) (i) மற்றும் (ii) தவறு
c) (i) சரி (ii) தவறு
d) (i) தவறு (ii) சரி

65) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) உடல் நோயற்றும் மனம் கவலையற்றும் இருக்கும் ஒரு நிலை ஆரோக்கியம்

(ii) நுண்ணிய திரவத்துளிகள், திண்மம் அல்லது வாயுக்கள் வளிமண்டலத்தில் சில குறிப்பிட்ட காலத்திற்கு கலந்து நிற்பது நீர்மக்கரைசல்

a) (i) மற்றும் (ii) சரி
b) (i) மற்றும் (ii) தவறு
c) (i) சரி (ii) தவறு
d) (i) தவறு (ii) சரி

66) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) கடந்த சில நூற்றாண்டுகளில் மனிதனின் வாழ்வு முறையில் தீவிர மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

ii ) வேளாண் வளர்ச்சி, தொழில்மயமாக்கல், நகரமயமாதல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களின் அதிவேக வளர்ச்சி மனிதனின் இறப்பு விகிதத்தை குறைத்து அதிவேக மக்கள் தொகை பெருக்கத்திற்கு காரணமாக உள்ளது.

iii ) மக்கள் தொகை பெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க இயற்கை வளங்களின் தேவை அதிகரித்து வளங்களை அளவுக்கு அதிகமாக பயன்படுத்தும் நிலை உருவாகியுள்ளது.

a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

67) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) வளங்கள் அபாய நிலையில் அழிந்து வருவதை உணர்ந்தும் மற்றும் அதை தடுத்து எவ்வாறு பாதுகாப்பது என்ற உண்மையை அறிந்து நாடுகள் விழித்து எழுந்திருக்கின்றன.

ii ) நிலைத்தன்மையானது கலாச்சார உயிர்ப்பு தன்மை, ஆரோக்கியமான பொருளாதார நிலை, சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு மற்றும் சமத்துவ சமூகம், எனும் தூண்களில் ஊக்கப்படுத்தப்படுகிறது.

iii ) தற்போது அனைத்து நாடுகளும் பேணத்தகுந்த மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துகின்றன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

68) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) பேணத்தகுந்த மேம்பாடு என்ற கருத்து முதலில் 1972 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் தேதி ஸ்டாக் ஹோமில் மனிதன் வாழும் சூழல் எனும் தலைப்பில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபை கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட கொள்கைகளில் வெளியிடப்பட்டது.

(ii) வளர்ச்சி என்பது பேணத்தகுந்ததாக இருக்க வேண்டும் என தற்போது உணரப்பட்டுள்ளது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

winmeen.com